*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **30 ஏப்ரல், 2025**

**<u>மே தின வாழ்த்துச் செய்தி</u>**

உழைக்கும் மக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த மே தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகம் எங்கும் உள்ள உழைக்கும் மக்களின் பெருமையை, தியாகத்தை பறைசாற்றி அவர்களுடைய உரிமைகளை நிலை நாட்டுவதை இந்த உழைப்பாளர் தினம் முன்நிறுத்துகிறது.

உழைப்பாளர்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். பொருளாதார முன்னேற்றத்தின் அச்சாணியாக இருப்பவர்கள். அவர்களுடைய நலனை, வாழ்வை, வாழ்வாதாரத்தை பாதுகாப்பதில் நம் ஒவ்வொருவருடைய பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதை இந்த நாள் உணர்த்துகிறது.

உழைக்கும் மக்கள் அனைவரும் எல்லா வளமும் நலமும் பெற்று நல்வாழ்வு எட்ட மனதார வாழ்த்துகிறேன்.

(K. கைலாஷ்நாதன்)